**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 51/2022 (C/W OS. 268/2022)

பெயர் : வைத்தியநாதன் (DW1) (Cross Continuation)

த/க/பெ. :

தேதி :01.12.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பி.வா.சா.ஆ. 2-ன் 12 வது பக்கத்தில் சுப்பிரமணியன் 04.11.2004 ல் மனு கொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவில் திருத்தத்திற்கு முன்பு மூகாம்பிகை என்றும் திருத்ததிற்கு பின்னர் சுப்பிரமணியன் என்றுள்ளது என்றால் சரிதான். சீர்காழி வட்டாட்சியரின் செயல் முறை உத்தரவு தான் அந்த ஆவணம். 04.04.2013 ம் தேதியிட்ட செட்டில் மெண்ட் ஆவணத்தில் சுப்பிரமணியன் பெயரில் உள்ள பட்டா இணைக்கப்படவில்லை என்றால் பதில் சொல்ல விரும்பவில்லை. வா.சா.ஆ. 5 ல் 20.02.2019 ம் தேதி வட்டாட்சியரால் நத்தம் நில வரி திட்ட சிட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்து கூற இயலாது அதற்கு முன்பே நாங்கள் தடை உத்தரவு வாங்கிவிட்டோம். அதில் பட்டா எண். 265 புல எண். 460/10 பட்டாதாரர் சொக்கலிங்கம் செட்டியார், தேனப்ப செட்டியார் என்றுள்ளது என்றால் அது குறித்து தெரியாது. வா.சா.ஆ. 5 ஆவணம் OS. 268/2022 வழக்கில் தாக்ககல் செய்துள்ளார்கள் என்றால் அதற்கு நாங்கள் தடை உத்தரவு வாங்கிவிட்டோம். வாசா.ஆ. 6 சொக்கலிங்கம் செட்டியார், தேனப்ப செட்டியாருக்கு கொடுக்கப்பட்ட அடங்கல் பதிவேடு என்றால் தெரியாது. வாசா.ஆ.3 மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் 12.09.2018 ம் தேதியிட்ட உத்தரவு எனக்கு சார்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளேன். மேல் முறையீட்டு உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வாசா.ஆ. 3 ல் பட்டா மாறுதல் உத்தரவில் மூல ஆணம் செட்டில் மெண்ட் என்பதற்கு பதிலாக கிரய ஆவணம் என்று தவறுதலாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து தெரியவில்லை. வடக்கில் மெயின் ரோடு தெற்கு வீதி, மேற்கில் நகரமடம், கிழக்கில் அழகப்பட்ட செட்டியார், மேற்கில் வைத்திஸ்வரன் கோவில் தென்னந்தோப்பு, நான்கெல்லையாகும் தாவா சொத்தில் மின் சார இணைப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். DRO மேல் முறையீடுசெய்த விபரத்தை எதிர்

Digitally signed by MUMTAJ
MUMTAJ Date: 2025.12.01 16:58:42 +0530

வழக்குரைலயில் சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளோம். வழக்கின் வாதிகள் சொக்கலிங்கம் செட்டியார், தேனப்ப செட்டியார் வாரிசுகள் என்றால் எனக்கு தெரியாது. வாதிகள் தாக்கல் செய்த இறப்பு சான்று, வாரிசு சான்று குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். எங்கள் வழக்கில் பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக காவல் துறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் வழக்கு தான் போட்டுள்ளோம். நான் போட்டுள்ள வில்லங்கசான்றில் மூகாம்பிகை பெயரில் ஆவணம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் சகோதரர் பெயரில் ஏற்பட்ட பட்டாவை 2018 ல் ரத்து செய்துவிட்டார்கள் என்றும் அதனை தெரிந்துக் கொண்டே தான் OS. 268/2022 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மையான உரிமையாளர்களுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்கும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. நானும் என் சகோதரரும், சாட்சிகளும் பி.வா.சா.ஆ. 2 ஆவணத்தை சொத்தை அபரிகக்கும் நோக்கில் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சொக்கலிங்கம் செட்டியார், தேனப்ப செட்டியார் வாரிசுகள் என்ற முறையில் வழக்கை நடத்த வாதிகளுக்கு உரிமை உள்ளதுஎன்றாலும் அதனை நான் மறுக்க இயலாது என்றாலும் சரியல்ல. 27.04.2013 ல் சீர்காழி மண்டல வட்டாட்சியரின் உத்தரவு பி.வாசா.ஆ. 1 ரத்து செய்யப்பட்ட பின்னரும் தவறான விபரங்களை குறிப்பிட்டு OS. 268/2022 தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 5 வட்டாட்சியருக்கு அனுப்பிய அறிவிப்பில் மேல் முறையிடு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதன் எண் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. அந்த ஆவணத்தை இணைத்துள்ளோம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ. 4 கோட்டாட்சியர் அறிவிப்பில் கண்ட விபரங்களை அனுசரித்து எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் மேல் முறையீடு செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் நான் தாக்கல்செய்த மேல் முறையிட்டு உத்தரவு என்றால் சரிதான் **அது பி.வா.சா.ஆ. 6 ஆக குறியிடுசெய்யப்படுகிற**து. அதில் நீதிமன்ற தீர்ப்பிற்கு பின்னர் தீர்ப்பின் அடிப்பைடையில் தனித்தனியாக விண்ணப்பித்துக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த உத்தரவை நிறுத்தி வைப்பதாக எந்த வித குறிப்பும் அததில் இல்லை என்றால் அது தவறான கேள்வி நீதிமன்ற உத்தரவின் படி செயல்படுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின் படி நான் செயல் பட தயாராக உள்ளேன். நான் வஞ்சகக்கூட்டாக இருந்து ஆவணத்தை தயார் செய்து அதன் அடிப்படையில் OS. 268/2022 வழக்கு தாக்கல் செய்துள்ளேன்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.12.01 16:58:49 +0530

என்பதால் அதன அடிப்படையில் எனக்கு எந்த வித பரிகாரமும் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. 10.11.2019 ம் தேதியில் மராமதது பணி பார்த்துக் கொண்டிருந்த போது நான் ஆட்களோடு வந்து இடையூறு செய்தேன் என்றால் அது அவர்களாக செய்துக் கொண்டது. தேனப்ப செட்டியார், சொக்கலிங்க செட்டியார் உரிமையாளர்களாக இருப்பதால் விளம்புகை பரிகாரம் கேட்க இயலாது என்றால்சரியல்ல. தாவா சொத்திற்கு தொடர்பில்லாத செல்லாத ஆவணங்களை வைத்துக் கொண்டு தாவா சொத்திற்கு வாதிகள் உரிமை இல்லாதவர்கள் என்று பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. தேனப்ப செட்டியார், சொக்கலிங்க செட்டியார் வாரிசுகள் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்பதால் அவர்கள் சொத்தை அவர்களே ஆக்கிரமிப்பு வேண்டியது இல்லை என்றால் சரியல்ல எங்கள் சொத்தை அவர்கள் ஆக்கிரமிக்க வருகிறார்கள். எங்கள் சொத்து என்றால் என்னுடைய சொத்து. என் சகோதரர் கிரய சாசனம் எதுவும் பெறபடவில்லை என்றால் எங்கள் சொத்தை நாங்கள் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. OS. 268/2022 வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.12.01 16:58:53 +0530